# பெருமாள் திருமொழி

விடையளி:

1. குலசேகராழ்வார் வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையிடம் வேண்டுவன யாவை? (அல்லது) பெருமாள் திருமொழியில் பெருமாளை குலசேகராழ்வார் அன்னையாக உருவகித்துப் பாடுவதை விளக்குக. ( அல்லது ) 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

- மருத்துவர், உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். அதுபோல,
- வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே!
- நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் என்று குலசேகராழ்வார் வேண்டுகிறார்.

2. குலசேகராழ்வார் பற்றி எழுதுக.

- ஆசிரியர் – குலசேகராழ்வார்
- காலம் - கி.பி.எட்டாம் நூற்றாண்டு
- மாநிலம் - கேரளா
- ஊர் – வித்துவக்கோடு
- மாவட்டம் – பாலக்காடு
- சிறப்பு வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவர்.
- எழுதிய நூல்கள் – முகுந்தமாலை, பெருமாள் திருமொழி

3. பெருமாள் திருமொழி - குறிப்பு எழுதுக.

- ஆசிரியர் - குலசேகராழ்வார்.
- இந்நூல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது.
- இதில் 105 பாடல்கள் உள்ளன.

- நம் பாடப்பகுதி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரத்தில் 691 ஆவது பாசுரம்.
- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனிகள்.